# இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபை

## வாய்ப்பு விளம்பரம்

**பல்-தொழில்நுட்பவியலாளர் (தலைமை அலுவலகம் - பதவி வெற்றிடம் 1, தேசிய ஓய்வு விடுதி - பதவி வெற்றிடங்கள் 02)**

**பதவிக்குரிய அலுவலகக் கடமைகள்**

- மின்சார, நீர் பாம்பி நிலையம், குளிரூட்டல் முறைமை, மின்பிறப்பாக்கி இயந்திரங்கள், மின்தூக்கி முதலியவற்றின் பராமரிப்புப் பணிகளுக்கு உதவுதல்.
- தொலைபேசிகளை உரிய முறையில் பராமரிக்க உதவுதல்.
- ஓய்வு விடுதிக் கட்டிட வளாகங்களின் பராமரிப்புப் பணிகளைத் தேடிப்பார்த்து அறிக்கையிடுதல் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு உதவுதல்.
- பல வைபவங்களின் போது மின்னொளி வழங்கல் மற்றும் ஏனைய உதவிப் பணிகளை நிறைவேற்றல்.
- வளாகங்களின் முகாமைத்துவப் பணிகள் தொடர்பான கடிதங்களையும் கோவைகளையும் தயாரித்தல், தேவையான கொள்வனவு நிமித்தம் உதவுதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை நிறைவேற்றல்.
- பிரிவுத் தலைவர்/அல்லது நிறுவன தலைவர் பணிக்கும் ஏனைய அலுவலப் பணிகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**திறன்கள்**

ஒவ்வொரு பதவியினதும் கரும பணிகளுக்கு பொருத்தமானவாறு மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீரித்துள்ள ஒரு தொழில்நுட்ப /வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் வழங்கும் தேசிய தொழில் தகைமை (**NVQ**) நான்காம் (4) மட்டத்திற்குக் குறையாத வாகனத் தொழில்நுட்பத்தில் / மின் தொழில்நுட்பத்தில் / நீர் சார்ந்த தொழில்நுட்பத்தில் / குளிரூட்டல் முறைமையில் / மேசன் வேலையில் / தட்சன் வேலையில் ஒரு திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

உரிய பிரிவில் ஐந்து (**5**) வருட கால அனுபவத்தையும் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி/ தொழில் பயிற்சி நிறுவகம் உரிய பதவியின் கரும பணிகளுக்கு ஏற்றவாறான தேசிய தொழில் தகைமை (**NVQ**) நான்காம் **(4)** ஆம் மட்டத்திற்குக் குறையாத ஒரு மட்டத்தில் வாழ்க்கைத்தொழில் பரீட்சையில் (செயன்முறைப் பரீட்சை) சித்தியடைந்திருத்தல்.

அல்லது

ஒவ்வொரு பதவியினதும் கரும பணிகளுக்கு ஏற்ப மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீரித்துள்ள ஒரு தொழில்நுட்ப/வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் வழங்கும் தேசிய தொழில் தகைமை (**NVQ**) நான்காம் **(4)** மட்டத்திற்குக் குறையாத ஒரு திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை**

18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள அளவுத்திட்டம்**

PL 3 **ரூ.** 26,290/- 10 x **ரூ.**270/- 10 x **ரூ.**300/- 10 x **ரூ.**330/- 12 x **ரூ.**350/- **ரூ.**39,490/-

**ஆரம்ப சம்பளப் படிநிலை**

**ரூ.** 26,290/- + வாழ்க்கைப்படிச்செலவுக் கொடுப்பனவு + விஷேட கொடுப்பனவு

**நன்மைகள்**

- ஊழியரையும் அவரின் குடும்ப அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய கவர்ச்சியான ஒரு மருத்துவக் காப்புறுதித் திட்டம்
- கடன் வசதிகள்
- தொழில் முன்னேற்றத்திற்கான பயிற்சி வாய்ப்புகள்
- போக்குவரத்துக் கொடுப்பனவு

***குறிப்பு***

***தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அனுராதபுர, கதிர்காமம், பண்டாரவளை மற்றும் நுவரெலியா இடங்களில் அமைந்துள்ள எந்த ஒரு தேசிய ஓய்வு விடுதியிலும் பணியாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.***

அக்கறையுடைய குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்கள் **https://www.sltda.gov.lk/en/careers** என்ற எமது இணையத்தளத்திலிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்**.**

நீங்கள் தொழிலுக்குப் பொருத்தம் என நினைத்தால் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி உறவினர்கள் அல்லாத இரண்டு நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, உங்களின் சுய தகவல் அறிக்கையையும் (**CV**)**,** கல்வி/தொழில் தகைமை சான்றிதழ்களின் பிரதிகளுடனும், சேவை அனுபவத்தை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்களின் பிரதிகளுடனும் பதிவுத் தபாலில் தலைவர், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலக்கம் 80, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு **13.12.2024** ஆம் திகதிற்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடதுபக்க மேல்மூலயில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்களில் / அரச கூட்டுத்தாபனங்களில் / நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்தத் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பிவைக்க வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**
**இலக்கம் 80**, **காலி வீதி**,
**கொழும்பு 03**